**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.1314/2024 நாள்- 05.08.2026

**வா.சா.1. அருள் சீனிவாசன்**

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்**

என்னுடைய பெயர் மு. அருள் சீனிவாசன். வா.சா.ஆ.30-ன் படி உயில் ஆவணத்தை என் அப்பா மா. அருள்சீனிவாசன் என்பவருக்கு எழுதிக் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.30-ல் சொத்து விவரமாக வீடு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.30-ல் கண்ட சொத்து தபசில் சொத்து இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.30-க்கும், தபசில் சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரிதான். தபசில் சொத்தில் குமார் லேத் ஒர்க்ஸ் 1983 ல் இருந்து செயல்பட்டு வருகிறது என்றால் சரிதான். குமார் லேத் ஒர்க்ஸ்-ஐ பூர்ண செல்வகுமார் மற்றும் 1ம் பிரதிவாதி சேர்ந்து ஆரம்பித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. குமார் லேத் ஒர்க்ஸ்- ஆரம்பிப்பதற்கு அழைப்பிதழ் அடிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அழைப்பிதழ் தான் **1ம் பிரதிவாதி அடித்த அழைப்பிதழ்-- நகல் என்றால் சரிதான் அது பி.வா.சா.ஆ.1- ஆக** குறியீடு செய்யப்படுகிறது. அசலுடன் ஒப்பீட்டு பார்க்கப்பட்டது. பி.வா.சா.ஆ.1-அழைப்பிதழில் பூர்ண செல்வகுமார் பெயரும் 1ம் பிரதிவாதி பெயரும் என் அப்பா பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1-ல் என்னுடைய பெயர் இல்லை என்றால் நான் மைனராக இருந்ததால் குறிப்பிடவில்லை. குமார் லேத் ஒர்க்ஸ்-ஐ நான் நடத்தவில்லை என்றும், பூர்ணசெல்வகுமாரும், ரத்தினகுமாரும் சேர்ந்து நடத்தியதால் குமார் என்ற பெயர் வைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தபசில் சொத்தை கிரையம் வாங்குவதற்கு நான் எந்த ஒரு பங்கும் செலுத்தவில்லை என்று சொன்னால் நான் அப்போது மைனராக இருந்ததால் பங்கு கொடுக்கவில்லை. 1983 ல் பூர்ணசெல்வகுமார் வீட்டை விட்டு வெளியேறியதாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். 1985 ம் ஆண்டு பூர்ணசெல்வகுமார் மின் கட்டணம் செலுத்தியதாக வா.சா.ஆ.6, 7, 8 தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். பூர்ண செல்வகுமார் நான் கூறுவது போன்று 1983ம் ஆண்டு காணாமல் போயிருந்தால் 1985ம் ஆண்டு பூர்ணசெல்வகுமார் பெயரில் மின் கட்டணம் செலுத்துவதற்கு வாய்ப்பு இல்லை என்று

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

சொன்னால் சரியல்ல. பூர்ணசெல்வகுமார் எந்த வருடம் காணாமல் போனார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றும், வழக்கிற்காக தபசில் சொத்தை என் அப்பா தான் கிரையம் வாங்கினார் என்று பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தபசில் சொத்தை பூர்ணசெல்வகுமார் 20 வயதாக இருக்கும் போது கடன் வாங்கி ரத்தினகுமாருடன் கிரையம் வாங்கினார் என்றும், அங்கு குமார் லேத் ஒர்க்ஸ் என்ற பெயரில் தொழில் செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. குமார் லேத் மற்றும் வெல்டிங் ஒர்க்ஸ் மற்றும் அன்னை டியூசன் சென்டர் 1ம் பிரதிவாதி நடத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அன்னை டியூசன் சென்டர் மற்றும் குமார் லேத் மற்றும் வெல்டிங் ஒர்க்ஸ் தற்போதும் நடைபெற்று வருகிறது என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் 10.01.2023 என் அப்பா இறக்கும் வரை என் அப்பா தான் நிர்வாகம் செய்து வந்தார். 2002ம் ஆண்டில் நான் வெல்டிங் ஒர்க்ஸ்ஷாப் நடத்தி வந்தேன்.2002ம் ஆண்டு கால்நடை மருத்துவமனையில் கால்நடை ஆய்வாளராக பணிபுரிந்தேனா என்று கேட்டால் 01.10.2009ம் ஆண்டு கால்நடை ஆய்வாளராக பணியில் சேர்ந்தேன். நான் பொய் சொல்கிறேன் என்றும் 2002ம் ஆண்டே நான் கால்நடை ஆய்வாளராக பணியில் சேர்ந்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. தபசில் சொத்தில் உள்ள குமார் லேத் ஒர்க்ஸ் என் அப்பாவின் கட்டுப்பாட்டில் 2023 வரை இருந்ததற்காக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று கேட்டால் சரியல்ல. பூர்ணசெல்வகுமார் எப்போது காணாமல் போனார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றும், பூர்ணசெல்வகுமாரும், ரத்தினகுமாரும் சேர்ந்து கடன் வாங்கி கிரையம் பெற்ற சொத்து என்பதால் ரத்தினகுமாருக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. 1983ம் ஆண்டிலிருந்து குமார் லேத் ஒர்க்ஸ் -ஐ ரத்தினகுமாரும், பூர்ணசெல்வகுமாரும் நடத்தி வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 1983ம் ஆண்டிலிருந்து குமார் லேத் ஒர்க்ஸ் நடந்து வந்தது என்றும் நான் ஒருபோதும் ஆட்சேபணை தெரிவித்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.